


**11. 05. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தமிழ்நாட்டில் 17-வது சட்டப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்கள் இன்று பொறுப்பேற்றனர்.

முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய், எதிர்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின், முன்னாள் முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி உள்ளிட்டோர் பேரவையில் உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

2. உலகில் உள்ள எந்த சக்தியாலும் இந்தியாவை அடிபணிய வைக்க முடியாது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

3. பொக்ரான் அணு ஆயுத சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதை குறிக்கும் தேசிய தொழில்நுட்ப தினம் இன்று கடைப்பிடிக்கபடுகிறது.

4. தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கிக் கொள்ளப் பட்டதால் திருச்சி, அரியலூர், விழுப்புரம், தூத்துக்குடி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மக்கள் குறைதீர்நாள் கூட்டங்கள் இன்று நடைபெற்றன.

5. சீனாவில் நடைபெறும் 17 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியின் காலிறுதி சுற்றில் இந்தியா இன்று இரவு சீனாவை எதிர்கொள்கிறது.

இனி வி◌ா◌ிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

அமைச்சர்கள் பதவி பிரமாணம்

தமிழக சட்டமன்றத்தின் 17-வது பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்கள் அனைவரும் இன்று உறுதிமொழி கூறி பொறுப்பேற்றுக் கொண்டனர்.

2026 - ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் இன்று முறைப்படி பொறுப்பேற்றனர்.

இதற்கான பேரவை கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு தொடங்கியது.

பேரவையின் தற்காலிக தலைவர் திரு. கருப்பையா தலைமையில் இன்றைய கூட்டம் தொடங்கியது.

முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்று நன்றி தொிவித்த தற்காலிக பேரவைத் தலைவர் திரு. கருப்பையா, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரை வாழ்த்தியும், பாராட்டியும் சில கருத்துக்களை தொிவித்தார்.

அதன் பின்னர் முதலாவதாக முதலமைச்சர் திரு. சி. ஜோசப் விஜய் உறுதிமொழி கூறி பொறுப்பேற்றுக் கொண்டார்.

தொடர்ந்து அமைச்சர்கள் திரு. ஆனந்த்,

திரு. ஆதவ் அர்ஜுனா,

திரு. அருண்ராஜ்,

திரு. செங்கோட்டையன்,

திரு. வெங்கட்ரமணன்

திரு. நிர்மல் குமார்,

திரு. ராஜ்மோகன்,

திரு. T. K. பிரபு ஆகியோர் உறுதிமொழி கூறி பதவியேற்றுக் கொண்டனர்.

இதையடுத்து,

எதிர் கட்சித் தலைவரான திரு. உதயநிதி ஸ்டாலின்,

முன்னாள் முதலமைச்சர்கள் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி,

திரு. ஓ. பன்னீர் செல்வம் ஆகியோர் சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டனர்.

இதையடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களும், அகர வரிசைப்படி உறுதிமொழி கூறி பொறுப்பேற்றுக் கொண்டனர்.

<u>சற்றுமுன் கிடைத்த செய்தி</u>

தமிழக சட்டப்பேரவையில் அஇஅதிமுகவின் திரு. சி.வி. சண்முகம் தவிர 232 சட்டமன்ற உறுப்பினர்களும் இன்று பதவி ஏற்றுக் கொண்டனர்.

சட்டப்பேரவை தலைவர் தேர்தல் நாளை நடைபெறும் என்று தற்காலிக சபாநாயகர் திரு. பி. கருப்பையா அறிவித்து பேரவை நடவடிக்கைகளை இன்று ஒத்தி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

சோம்நாத் ஆலயம் நம்பிக்கை, புனிதம், தூய்மையின் சின்னமாக திகழ்கிறது என்று திரு. நரேந்திர மோடி தொ◌ிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் சோம்நாத் ஆலய பெருவிழாவின் 75-வது ஆண்டு நிறைவை ஒட்டி சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் மக்களிடையே உரையாற்றிய பிரதமர், பழமையை கொண்டாடும் ஒரு விழாவாக மட்டுமல்லாமல் அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கான நாட்டின் உத்வேகத்திற்கான விழாவாகவும் இது திகழ்கிறது என்றார்.

வேர்களோடு இணைந்திருந்தால் மட்டுமே ஒரு தேசம் நீண்ட காலம் வலுவாக இருக்க முடியும் என்பதை இந்த ஆலயம் நினைவூட்டுவதாக குறிப்பிட்டார்.

நாட்டின் முதலாவது 3 அணுசக்தி பரிசோதனைகள் நடைபெற்ற இத்தினத்தில் நம்நாட்டு விஞ்ஞானிகளின் திறன்கள் உலகம் முழுவதிற்கும் வெளிப்படுத்தப் பட்டதாக எடுத்துரைத்தார்.

இந்த அணுசக்தி சோதனைகள் மூலம் ஒருநாட்டின் அரசியல் நிலைப்பாடும், தீர்க்கமான முடிவும், உலக நாடுகளுக்கு பறைசாற்றப்பட்டதாவும் பிரதமர் குறிப்பிட்டார்.

முன்னதாக சோம்நாத் ஆலயத்திற்கு பேரணி மூலம் சென்ற பிரதமரை சாலையின் இரு மருகிலும் கூடியிருந்த மக்கள் உற்சாகமாக வாழ்த்தி வரவேற்றனர்.

சர்தார் வல்லப்பாய் பட்டேலின் ஒற்றுமையை சிலையில் மலரஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து ஆலயத்தில் கொடி ஏற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்ற வைபவத்திலும் அவர் பங்கேற்றார்.

இந்நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் விமானப்படையின் சூரிய கிரண் வான்வெளி சாகச நிகழ்வும் இடம்பெற்றன

❖❖❖❖❖❖❖❖❖

தேசிய தொழில்நுட்ப தினம்

தேசிய தொழில்நுட்ப தினம் இன்று கொண்டாட படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. அமித்ஷா உள்ளிட்டோர் நாட்டின் விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் பொக்ரான் அணு ஆயுத சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதை இந்நாள் குறிப்பதாக எடுத்துரைத்தார்.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் 1998-ம் ஆண்டு வெற்றிகரமாக நடைபெற்ற பொக்ரான் சோதனையில் இந்தியாவின் கடின உழைப்பையும் விஞ்ஞானிகளின் அளப்பா்ிய அர்ப்பணிப்பையும் நாடு பெருமிதத்துடன் நினைவு கூர்வதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திரு. அமித்ஷா, திரு. ராஜ்நாத் சிங், டாக்டர் ஜீதேந்திர சிங் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்தியில் நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் விஞ்ஞானிகளின் புதுமையான சிந்தனைகளையும், விடா முயற்சியையும் பாராட்டுவதாக வாழ்த்தியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

அஷ்விணி வைஷ்ணவ்

உலகளாவிய தேக்க நிலையின் மத்தியில் குடிமக்களும், வர்த்தகர்களும், அந்நிய செலாவணி பரிவர்த்தனை தேவைப்படும் பொருட்களுக்கான செலவை குறைப்பதன் அவசியத்தை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தொ்ிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பு வருடாந்திர கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், மேற்காசியா நெருக்கடிகள் தொடரும் நிலையில், பொருளாதாரம் சார்ந்து நாம் பொறுப்புடன் நடந்து கொள்வது நாட்டிற்கு தற்போது மிகவும் இன்றியமையாதது என்றார்.

பொதுமக்கள் தங்கள் வாழ்வில் வெளிநாட்டு நேரடி பரிவர்த்தனைக்கான பகுதிகளை கண்டறிந்து அவற்றை தவிர்ப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

செலவினங்களை குறைக்கும் அதே வேளையில் நம்நாட்டின் அந்நிய செலாவணி வருவாய் அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

எனவே நாட்டின் பொருளாதார நிலையை வலுப்படுத்தும் வகையில் இவ்விரு நடவடிக்கைளும் ஒருங்கே நடைபெற வேண்டுமென்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

மேற்காசியா நெருக்கடி நிலைமையை கண்காணிக்க உயர்மட்ட அமைச்சர்கள் குழு கூட்டம் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் டெல்லியில் இன்று நடைபெற்றது.

மேற்காசிய பகுதி மோதல்களை தொடர்ந்து அப்பகுதியில் உருவாகும் நிலைமை குறித்து இதில் விவாதிக்கப்பட்டது

மத்திய அமைச்சர்கள் திரு. ஜே.பி.நட்டா, திரு. ஹர்தீப் சிங் பூரி, திரு. சர்பானந்த சோனோவால், திரு. கிரண் ரிஜிஜு, டாக்டர் ஜீதேந்திர சிங், திரு. கே. ராம்மோகன் நாயுடு ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

குறைதீர்நாள் கூட்டம்

தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கிக்கொள்ளப் பட்டதை அடுத்து திருச்சி, அரியலூர், விழுப்புரம், தூத்துக்குடி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மக்கள் குறைதீர்நாள் கூட்டம் இன்று நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு விசு மஹாஜனிடம் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் ஆட்சி தலைவர் அலுவலகத்தில் தங்களது குறைகள் சார்ந்த மனுக்களை வழங்கினார்கள்.

திருச்சி, அரியலூர் மாவட்டங்களிலும் நடைபெற்ற குறைதீர்நாள் முகாமில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மனுக்களை பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜினாமா

தி.மு.க. கூட்டணியிலிருந்து காங்கிரஸ் வெளியேறியதை அடுத்து வேலூர் மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் பதவியை காங்கிரஸ் கட்சியின் திரு. கிருஷ்ணவேணி ராஜினாமா செய்வதாக இன்று தொிவித்தார்.

ராஜினாமா கடிதத்தை ஆட்சித்தலைவரிடம் வழங்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

வேலூர்

வேலூர் மாவட்டம் சத்துவாச்சேரி பகுதியில் பாலாற்றின் கரையோரம் கொட்டப்படும் குப்பைகளை அகற்ற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி தெரிவித்துள்ளார். இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

சிவகங்கை

சிவகங்கை மாவட்டத்திற்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளதை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

நாகை

நாகை மாவட்டம் வேதாரண்யம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த தொடர் கன மழையில் 9 ஆயிரம் ஏக்கர் உப்பளங்கள் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக உப்பு உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஏர்வாடி தர்கா

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை ஏர்வாடி மகான் குத்பு சுல்தான் சையது இப்ராஹீம் ஷஹீது ஒலியுல்லா தர்காவின் 852-ம் ஆண்டு சந்தனகூடு சமூக நல்லிணக்கத் திருவிழா நேற்றிரவு வெகுவிமரிசையாக நடைபெற்றது.

முக்கிய வீதிகள் வழியாக குதிரைகள் நடனமாட, தாரை தப்பட்டை ஒலிக்க, வானில் வர்ண ஜாலங்களுடன் ஊர்வலம் வெகுசிறப்பாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

காலபந்து

சீனாவில் நடைபெறும் 17 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியின் காலிறுதி சுற்றில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் தரம்சாலாவில் இன்றிரவு ஏழரை மணிக்கு பஞ்சாப் கிங்ஸ் – டெல்லி கேப்பிட்டல்லை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖